1987 நவம்பர் 13]

குடியாத்தம் மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரித்தல்.

98—(*வினா எண். 9307)—திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

குடியாத்தம் மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது உள்ள படுக்கை வசதி (112) போதுமானதாக கருதப்படுவதால் அதை உடனே அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

நாகப்பட்டினம்—வேதாரண்யம் கால்வாயை சீரமைத்தல்.

99—(*வினா எண். 9033)—திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினத்திலிருந்து வேதாரண்யம் வரை செல்லும் வேதாரண்யம் கால்வாயை படகு போக்குவரத்திற்கு உதவிடும் வகையில் சீரமைக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்வடிவம் பெறும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம், (ஆ) இத்திட்டத்தை 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்ய மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக, கடலோரப் பகுதியில், அதுவும் தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலங்களுக்குள்ளே ரோடுகள் போவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கருதி, அந்தக் கால்வாயிலே சரக்குப் போக்குவரத்தைக் கொண்டு செல்வதற்கு, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அவ்வேலையைத் துவக்குவதற்கான முறையில், மத்திய அரசின் அனுமதியைப் பெற மாநில அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை மத்திய அரசிற்கு, மாநில அரசு அனுப்பி வைத்திருக்கிறது. அதிலே ஏறத்தாழ 396 இலட்சம் ரூபாயில் இதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. 1863 ஆம் ஆண்டு இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. பின்னால் அங்கே ரயில் போக்குவரத்து அதிகமாக வந்த காரணத்தால், இப்போது கால்வாய் பயன்படுத்தப்படாமல் சீர்கெட்டு இருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையைப் பொறுத்து அதைப் பயனுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, இந்தத் திட்டத்தைத் தீட்டி மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசிலிருந்து இதற்காக நிதி ஒதுக்கப்பட்டால் தான் காரியங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்க முடியும். அவர்கள் எடுத்துக் கொள்கிறார்களா, இல்லையா என்பதைப் பொறுத்துத்தான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் வெட்டப்பட்டதற்குப் பிறகு ரயில் போக்குவரத்து அதிகமானதினாலே அது சீர்கெட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது ரயில் போக்குவரத்தே சீர்கெட்டு, திருத்துறைப்பூண்டிக்கும், வேதாரண்யத்திற்கும் இடையில் ரயில் போக்குவரத்து பெரும் பகுதி இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தக் கால்வாயினுடைய அவசியத்தைக் கருதி மாநில அரசு, இந்த 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அதற்கான அனுமதியைப் பெற முயற்சிகளை எடுக்குமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை மாநில அரசு பரிந்துரைக்கின்றபோதே அது வரவேண்டுமென்ற ஆவலோடுதான் திட்டங்களை அனுப்புகிறது. இருந்தாலும் மத்திய அரசுக்கு மீண்டும் ஒரு முறை அது குறித்து வலியுறுத்தி கடிதம் எழுதுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். எனவே, நம்மைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் வருவதுதான் சரியாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.